**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**
**<u>அ.வ.எண்.233/2024</u>**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02–ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பெரியம்மாள் | தொழில் |
| க/பெ | முத்துச்சாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடன் தருவதாக பத்திரத்தில் ஏமாற்றி கையெழுத்து வாங்கியதாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு படிப்பறிவு இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் தேதி மற்றும் வருடத்தை வழக்கறிஞர் பார்த்து எழுதினார். 16.07.2013 ஆம் தேதி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது. மேற்படி பத்திரத்தை ரத்து செய்து சொத்தை மீட்டு தர வேண்டி 2019 ஆம் வருடம் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு காங்கேயம் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் காங்கேயம் காவல் நிலையத்தில் என்னையும் என்னுடைய மகளையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மனுவை வள்ளியாத்தாள் மற்றும் அவரது கணவர் மீது, நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதே என்னை அழைத்துச் சென்று ஆவணத்தை பதிவு செய்ததாகவும் மேற்படி சொத்தை மீட்டுக் கொடுக்கும் படியும் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. நான் காவல் ஆய்வாளரிடம் மேற்படி பத்திரத்தை உரிய அலுவலகத்தில் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வந்து விட்டேன் என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு 16.11.2023 ஆம் தேதி

தாராபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெற்றோர் மற்றும் முதியோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் என்னுடைய மகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நடவடிக்கைக்கு வந்தது. செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா வீட்டின் பட்டா என்னுடைய மகள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. தற்போது தெரிந்த பிறகு தான் நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி பட்டாவை ரத்து செய்ய நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சொந்தமாக விவசாய பூமி எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது சொந்த ஊர் பாப்பினி கிராமம் நாட்டார்வலசு என்று சொன்னால் சரிதான். என்னுடைய கணவர் எண்ணெய் மற்றும் அரிசி மண்டையில் வாட்ச்மேன் ஆக வேலை செய்தார் என்றால் சிறிது காலம் தான் வேலை செய்தார். ஐந்து வருடம் இணைஅவ்வாறு வேலை செய்தார். நான் தேங்காய் களத்தில் வேலை செய்து வருகிறேன். நானும் என்னுடைய கணவரும் வாடகை வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரிதான்.

3. என்னுடைய மகளுக்கு இரண்டு மகள்கள் உண்டு என்று சரிதான். அவருடயை பெரியமகள் என்னுடன் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரையில் என்னுடைய தேவைகளை நானே செய்து கொள்கிறேன் என்றால் சரிதான். தற்போது விளக்குமாறு செய்யும் வேலை செய்து ஜீவனம் செய்து வருகிறேன். தற்போது என்னுடைய இரண்டு மகள்களும் எனக்கு ஆதரவாக இல்லை என்று சொன்னால் சரிதான். எப்போதும் எந்த மகளும் என்னுடன் அனுசரனையாக இல்லை. என்னுடைய இளைய மகள் தேவி எப்போதும் என்னுடன் அனுசரணையாக இருப்பதாக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னுடைய மகள் தேவி என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னிடம் வள்ளியாத்தாள்தான் கடன் வாங்குவதாகவும் அதற்கு

கையெழுத்து வேண்டும் என்றும் கேட்டார். அப்போது  என்னுடைய சிறிய மகள் தேவி இல்லை.  அவர் என்னிடம் பணக்கஷ்டத்திற்காக கேட்கிறார்கள் என்றும் என்னை கையெழுத்து போட்டுக் கொடுக்கும் படியும் சொன்னார்களா என்றால் இல்லை.

4. நான் ரேகை வைத்த போது என்னுடன் வேறு யாரும் வரவில்லை. சார்பதிவாளர் பதிவு அலுவலகத்தில் மேற்படி ஆவணத்தை என்னுடைய சம்மதத்தின் பேரில் எழுதிக் கொடுத்தேனா என்று என்னிடம் கேட்டார்களா என்றால் இல்லை.  சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒவ்வொரு பத்திரத்திற்கும் அதை எழுதிக் கொடுப்பவரின் சம்மதத்தை கேட்டு தான் பதிவார்கள் என்றாலும் மேற்படி சங்கதியை மறைத்து நான் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விருப்பப்பட்டுதான்  செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக் கொடுத்தேன் என்றாலும் அன்றைய தினமே சொத்தின் சுவாதீனத்தையும் என்னுடைய மகனிடம் ஒப்படைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் அடிப்படையில் பிரதிவாதி தன்னுடைய பெயரில் பட்டா மாறுதல் செய்து சுவாதீன அனுபவத்தில்  இருந்து வந்தார்கள் என்று சொன்னால் சரி அல்ல. என்னுடைய கணவர் இறந்த பிறகு எனக்கு ஆதரவு இல்லை என்ற காரணமாக என்னுடைய மகள் தான் மீண்டும் என்னை அந்த வீட்டில் குடி அமர்த்தினார் என்று சொன்னால் சரியல்ல.

5. மேற்படி அசல் ஆவணங்கள் அனைத்தும் அந்த வீட்டில் இருந்தது என்றாலும் அதை தற்போது என்னுடைய கைவசம் நான் வைத்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. அசல் ஆவணங்களை நான் இடத்தை விற்க வேண்டும் என்று கேட்டதால் என்னுடைய மகள் என்னிடம் கொடுத்தார்.  2023 ஆம் ஆண்டு அவ்வாறு பத்திரத்தை கொடுத்தார்.  2023 ஆம் வருடத்திற்கு முன்பு தாவா சொத்தின் அசல் பத்திரங்கள் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான்.  2019 ஆம் வருடம் காவல் நிலையத்தில் நடந்த விசாரணையின் போது அசல் ஆவணங்கள் என்வசம் இருப்பதாக எழுதி கொடுத்துவிட்டு தற்போது மேற்படி சங்கதியை மறைத்து சாட்சியமளிக்கிறேன்  என்று சொன்னால்

சரியல்ல.

6. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னுடைய விருப்பப்படி நான் எழுதிக் கொடுத்து அது நடைமுறைக்கு வந்த பிறகு மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. கோவில் வழியைச் சேர்ந்த யுவராஜ், அர்த்தனாரிபாளையத்தைச் சேர்ந்த செந்தில்குமார் ஆகியோர் என்னுடைய உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பத்திரத்தை பார்த்த பிறகு அதில் சாட்சி கையெழுத்து செய்த நபர்களை சந்தித்து மேற்படி பத்திரத்தை கொடுத்து கேட்டேனா என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அவர்களைப் பற்றி விசாரிக்க நான் முயற்சி எடுக்கவில்லை. மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் குறித்து ஏற்கனவே எனக்கு தெரிந்து அது குறித்து 2019 ஆம் வருடம் புகார் கொடுத்துவிட்டு தற்போது மேற்படி சங்கதி தெரியாது என்று தவறாக வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு காலக்கெடு சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.02 20:15:40 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.